# கடன் அட்டை வைத்திருப்பவருக்கும் ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ (PQ 82) க்கும் இடையிலான ஒப்பந்தம்

## 1. வரையறைகள

ஒப்பந்தம் தேவைப்படும் அல்லது ஒப்புக்கொள்ளப்படும் இந்த நிபந்தனைகளில், 'இந்த ஒப்பந்தம்' என்பது வங்கிக்கும் அட்டைதாரருக்கும் இடையேயான ஒப்பந்தமாகும். இந்த நிபந்தனைகளின் விதிமுறைகள் அவ்வப்போது மாறுபடும். 'அட்டை' என்பது ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீயால் முதன்மை மற்றும் துணை அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்ட அனைத்து கடன் அட்டைகளையும் குறிக்கிறது. 'முதன்மை அட்டைதாரர்' என்பது யாருடைய பெயரில் அட்டைக்குரிய கணக்கு பராமரிக்கப்படுகிறதோ அந்த நபர், அவரது வாரிசுகள், நிறைவேற்றுநர்கள் அல்லது நிர்வாகிகளை நியமிக்கும் அட்டையை வைத்திருப்பவர் என்பதாகும். 'துணை அட்டைதாரர்' என்பது அட்டைப் பரிவர்த்தனைகளை மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்ட அவரது வாரிசுகள், நிறைவேற்றுநர்கள் அல்லது நிர்வாகிகளை உள்ளடக்கிய முதன்மை அட்டைதாரரினால் பரிந்துரைக்கப்பட்ட அட்டைதாரர் என்று பொருள்படும். 'வங்கி' என்பது ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, அதன் பொறுப்பாளர், மற்றும் தொடர்ந்து அப்பதவிக்கு வருவோர் என்பதைக் குறிக்கும். 'அட்டைக் கணக்கு' என்பது அட்டை பரிவர்த்தனைகள் தொடர்பாக வங்கியால் பராமரிக்கப்பட்டு, அட்டை நிலையத்தில் பராமரிக்கப்படும் கணக்கு. 'அட்டை நிலையம்' என்பது 479, ரீ. பீ. ஜாயா மாவத்தை, கொழும்பு 10 எனும் முகவரியிலுள்ள ஹற்றன் நேஷனல் பிஎல்சீயின் பதிவு அலுவலகத்திலுள்ள ஹற்றன் நேஷனல் வங்கி பிஎல்சீயின் கடன் அட்டைத் திணைக்களத்தின் பிரதான அலுவலகம் மற்றும் இணையத்தளத்தில் அறிவிக்கப்பட்ட வேறு இடங்களிலும் அமைந்துள்ளது. அட்டைதாரர் என்பது இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் வங்கியால் வழங்கப்பட்ட அட்டையைப் பயன்படுத்தும் முதன்மை அட்டைதாரர்கள் மற்றும் துணை அட்டைதாரர்கள் மற்றும் அவர்களது வாரிசுகள், நிர்வாகிகள் மற்றும் நிறைவேற்றுநர்களை உள்ளடக்கும். 'அட்டை பரிவர்த்தனைகள்' என்பது பொருட்கள் அல்லது சேவைகளை வழங்குவதற்காக எந்தவொரு வர்த்தகருக்கும் செலுத்தப்படும் பணம் அல்லது அட்டை எண்ணைப் பயன்படுத்தி அல்லது அட்டை வைத்திருப்பவரைப் பயன்படுத்தி அல்லது அட்டை வைத்திருப்பவரால் அங்கீகரிக்கப்பட்ட எந்த வகையிலும் அட்டைக் கணக்கில் செலவு செய்வதற்காக பெறப்பட்ட பணம் மற்றும் முன்பணங்கள் என்பதைக் குறிக்கும். 'உடனடி குடும்ப உறுப்பினர்' என்பது, அட்டைதாரரின் மனைவி, 18 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகள் அல்லது அட்டைதாரரின் பெற்றோரில் ஒருவர் ஆகும். 'வியாபாரி' என்பது அட்டையை ஏற்றுக்கொண்டதன் பேரில் பொருட்களை அல்லது சேவைகளை விற்க வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நபர் அல்லது அமைப்பு ஆகும். 'அட்டை வரம்பு' எனப்படுவது வங்கியால் அவ்வப்போது தீர்மானிக்கப்பட்டு முதன்மை அட்டைதாரருக்கு அறிவிக்கப்பட்டபடி, அட்டைக் கணக்கில் அனுமதிக்கப்பட்டுள்ள அதிகபட்ச மொத்த கடன் தொகை ஆகும். PIN என்பது தனிப்பட்ட அடையாள எண். இது இரகசிய எண். அட்டைதாரருக்கு இரகசியமாக வழங்கப்படும். 'பணம் செலுத்த வேண்டிய திகதி' என்பது அட்டையைப் பயன்படுத்துவதற்காக அட்டை வைத்திருப்பவர் வங்கியில் செலுத்தவேண்டிய அனைத்து அல்லது குறைந்தபட்ச தொகையை வங்கியில் செலுத்தவேண்டிய திகதியாகும். மேலும் இது ஒவ்வொரு மாதமும் வங்கியால் அதன் விருப்பப்படி தேர்ந்தெடுக்கப்பட்டு முதன்மை அட்டைதாரருக்கு அறிவிக்கப்படுவதுடன் இணையத்தளத்திலும் வெளியிடப்படும். ர்டீே ATM என்பது HNB Automated Teller ஆயஉாநெ அதாவது ர்டீே தானியங்கி பணம் செலுத்தும் இயந்திரம் என்பதாகும். 'இணையத்தளம்' என்பது www.hnb.net (அல்லது காலத்துக்குக் காலம் வங்கியினால் பராமரிக்கப்படுவதுடன் அட்டைதாரருக்கு அறிவிக்கப்படுவதுமான ஒரு தளம்) இது அதிகார பூர்வமான இணையத்தளம். இதில் அட்டை தொடர்பான அனைத்து பொது அறிவிப்புகளும் வெளியிடப்படும்.

'தனிப்பட்ட பயன்பாடு' என்பது அட்டையை வைத்திருப்பவர், அவரது மனைவி/ கணவன். பிள்ளைகள் மற்றும் பெற்றோரின் பயன்பாட்டிற்கானது. வேறு எந்த வணிக நோக்கங்களுக்காகவும் அட்டையைப் பயன்படுத்துவதை உள்ளடக்காது.

## 2. அட்டையின் பயன்பாடு

2.1 அட்டை பெறப்பட்டவுடன் உடனடியாக அட்டை வைத்திருப்பவரால் கையொப்பம் இடப்படவேண்டும். அத்துடன் பின்வரும் முறைகளிலேயே பயன்படுத்தப்படவேண்டும்.

i. அட்டைதாரரின் தனிப்பட்ட பயன்பாட்டிற்காக.

ii. பயன்படுத்தப்படும் நேரத்தில் உள்ள இந்த ஒப்பந்தத்தின் விதிமுறைகளுக்கு உட்படவே பயன்படுத்தப்படவேண்டும்.

iii. அட்டை வரம்பிற்குள் பயன்படுத்தப்படவேண்டும். (அட்டை வரம்பிற்கு அதிகமாக இருந்தால் உடனடியாக வங்கிக்கு மீள செலுத்தப்படவேண்டும். கடன் வரம்பு மீறப்பட்டுள்ளதா என்பதைக் கணக்கிடும்போது அட்டைக் கணக்கிலிருந்து இதுவரை எடுக்கப்படாத அளவு மற்றும் வருங்கால அட்டைப் பரிவர்த்தனை தொடர்பாக மூன்றாம் தரப்பினருக்கு வழங்கப்பட்ட அங்கீகாரம் ஏதாவது இருக்குமானால் அவற்றை வங்கி கணக்கில் எடுத்துக்கொள்ளும்.

iv. அட்டையில் பொறிக்கப்பட்டுள்ள செல்லுபடியாகும் காலத்திலேயே பயன்படுத்தப்படவேண்டும்.

v. வெளிநாட்டுநாணயம் தொடர்பான மின்னனு நிதி பரிமாற்றத்தில் (EFT) அட்டை பயன்படுத்தப்பட்டால், அது பரிமாற்றக் கட்டுப்பாட்டுத் துறையின் விதிமுறைகளுக்கு உட்பட்டிருப்பதுடன் பரிமாற்றக் கட்டுப்பாட்டுத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட நோக்கங்களுக்காக மட்டுமே இருக்கவேண்டும்.

vi. பரிமாற்றக் கட்டுப்பாடுகள் சட்டத்தின் பணிப்புரைகள் அல்லது வழிகாட்டுதலில் குறிப்பிட்டுள்ளபடி, எந்தவொரு நிலம் அல்லது சொத்தை வாங்குவதற்கும், மாதாந்தத் தவணைகளைச் செலுத்துவதற்கும் அல்லது எந்தவொரு மூலதனக் கணக்குப் பரிமாற்றத்துக்கும் அட்டைதாரர் கடன் அட்டையைப் பயன்படுத்தக்கூடாது.

vii. அட்டைதாரர், வங்கியால் தடுக்கப்பட்டதை உறுதிசெய்யும் பட்சத்தில், வங்கியின் கோரிக்கையின் பேரில், மாற்று/ தகராறு/ விசாரணையின் போது, அட்டையை HNB கிளை/ அட்டை நிலையத்தில் ஒப்படைக்கவேண்டும்.

viii. பரிவர்த்தனை சரிபார்ப்பு நோக்கங்களுக்காக அட்டை வெளிநாடுகளில் பயன்படுத்தப்பட்டால் அதை அட்டைதாரர் வங்கிக்குத் தெரியப்படுத்தவேண்டும்.

## 3. அட்டைக் கணக்கு

3.1 அட்டையைப் பயன்படுத்துவதால் வங்கிக்கு ஏற்படும் சட்டக்கட்டணம், பிற நிர்வாகச் செலவுகள், இழப்புகள் போன்றவற்றை உள்ளடக்கி, அட்டைதாரரால் திரட்டப்பட்ட அனைத்து அட்டைப் பரிவர்த்தனைகள் மற்றும் பிற பொறுப்புகளின் தொகையுடன் வங்கி அட்டைக்கணக்கில் பற்று வைக்கலாம்.

3.2 அட்டைதாரர் கையொப்பமிட்ட விற்பனை அல்லது ரொக்கம் முன்கூட்டிய வவுச்சரில் கையொப்பமிடப்பட்டாலும் இல்லாவிட்டாலும் அவ்வாறு எடுக்கப்பட்ட அனைத்துத் தொகைகளையும் அட்டைதாரர் வங்கிக்குச் செலுத்தவேண்டும்.

3.3 அட்டைதாரர் எந்தவொரு சட்டவிரோத அல்லது சட்டவிரோத நோக்கத்துக்காக அட்டையைப் பயன்படுத்தக்கூடாது. மேலும், இலங்கையின் ஊடீளுடு விதிமுறைகள் மற்றும் பரிமாற்றக் கட்டுப்பாட்டு விதிமுறைகளை மீறக்கூடாது.

3.4 வங்கியானது, அட்டை நிலையத்திற்கு முறையாக அறிவிக்கப்பட்ட கணக்குகளின் மாதாந்த அறிக்கையை முதன்மை அட்டைதாரருக்கு, விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு அல்லது அட்டைதாரரால் முன்கூட்டி அறிவிக்கப்பட்ட வேறு ஏதாவதொரு முகவரிக்கு, பணம் செலுத்தவேண்டிய திகதிக்கு குறைந்தது பதினான்கு (14) நாட்களுக்கு முன்பதாக, அனுப்பும்.

3.5 அட்டைதாரர் செலுத்தவேண்டிய குறைந்தபட்சத் தொகையை செலுத்தவேண்டிய திகதியில் அல்லது அதற்கு முன் செலுத்தவேண்டும். குறைந்தபட்ச கொடுப்பனவு என்பது அட்டைதாரரின் மாதாந்த அறிக்கையில் காட்டப்படும் தொகை அல்லது அறிக்கையின் படி நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச தொகையாகும். அறிக்கைத் திகதியில் உள்ள மொத்த நிலுவைத் தொகை, கடன் வரம்பை மீறினால் குறைந்தபட்ச கொடுப்பனவு, கடன் வரம்பை விட கூடுதலான தொகை மற்றும் குறைந்தபட்ச நிலுவைக் கூட்டுத்தொகையாக இருக்கும்.

3.6 அட்டைதாரரால் பணம் செலுத்த முடியாத வங்குறோத்து நிலைக்கு உட்பட்டால் அல்லது முதன்மை அட்டைதாரரின் மரணத்தின்போது அல்லது வங்கியின் விருப்பத்தின் பேரில் இந்த ஒப்பந்தத்தின் கீழ் செலுத்தவேண்டிய அனைத்துத் தொகைகளும், செலுத்தப்படவேண்டும்.

3.7 வங்கியில் செலுத்தப்படும் எந்தவொரு கட்டணமும் பெறப்பட்டு அட்டைக் கணக்கில் வரவு வைக்கப்படும்போது மட்டுமே நடைமுறைக்கு வரும்.

## 4. கட்டணங்கள் மற்றும் விலைகள்.

4.1 அட்டைக்கு (அட்டைகளுக்கு) வங்கியின் இணைப்பு மற்றும் வருடாந்த கட்டணங்களைச் செலுத்த அட்டைதாரர் ஒப்புக்கொள்கிறார். கடன் அட்டையில் கொடுக்கப்பட்டுள்ள காலாவதித் திகதிக்கு முன்னதாக ஒரு மாதத்திற்கு முன் அட்டைதாரர் எழுத்து மூல அறிவிப்பை வழங்காத பட்சத்தில் அத்தகைய கட்டணங்கள் நிலுவையில் இருக்கும் போது அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்படும். அத்துடன் திரும்பச் செலுத்தப்படமாட்டாது.

4.2 அட்டைக் கணக்கின் பரிவர்த்தனை திகதியிலிருந்து தொடங்கும் காலகட்டத்தில், முழுமையாக பணம் செலுத்தும் திகதி வரை, அட்டை பரிவர்த்தனைகளுக்கு வட்டி விதிக்கப்படும். குறிப்பிட்ட காலப்பகுதியில் சராசரி தினசரி இருப்பு, வருடாந்திர விகிதத்தில் வங்கியால் அதன் விருப்பப்படி தீர்மானிக்கப்படுவதுடன் அதனை இணைத்தளத்தில் வெளியிடுவதன் மூலம் முதன்மை அட்டைதாரருக்கு அறிவிக்கப்படும். (அந்த வட்டியைக் கணக்கிடும் முறை, மற்றும் வட்டி விகிதம், அட்டையைப் பயன்படுத்தி செய்யப்படும் கொள்முதல் மற்றும் ரொக்க முன்பணம் ஆகிய இரண்டிற்கும் பொருந்தும். அவ்வாறு வசூலிக்கப்படும் வட்டி, அறிக்கைத் திகதியில் அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்படும். வசதிக்காக அட்டைதாரரின் இணையத்தளம் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைத்தொகைகளுக்கு வட்டி வசூலிக்கும் முறையின் விளக்கப்படங்களைக் கொண்டிருக்கவேண்டும்.)

4.3 செலுத்தவேண்டிய திகதிக்குள் அட்டைதாரர் மொத்த நிலுவைத்தொகையை வங்கிக்குச் செலுத்தத் தவறினால், அறிக்கைத் திகதியில் நிலுவையில் உள்ள நிலுவைத்தொகை வசூலிக்கப்படும். அத்துடன் வங்கியால் நிர்ணயிக்கப்படும் வருடாந்திர விகிதத்தில் பில்லிங் காலத்தில் சராசரி தினசரி இருப்புக்கு வட்டி கணக்கிடப்படும். எந்த நேரத்திலும் அதன் விருப்பப்படி முதன்மை அட்டைதாரருக்கு அறிவிக்கப்பட்டு இணையத்தளத்தில் வெளியிடப்படும். (அட்டையைப் பயன்படுத்தி செய்யப்படும் கொள்முதல் மற்றும் ரொக்க முன்பணம் ஆகிய இரண்டிற்கும் வட்டி மற்றும் வட்டி விகிதத்தைக் கணக்கிடும் முறை ஆகியவை பொருந்தும். அவ்வாறு வசூலிக்கப்படும் வட்டி அறிக்கைத் திகதியில் அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்படும். வசதிக்காக அட்டைதாரரின் இணையத்தளம் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைத்தொகைகளுக்கு வட்டி வசூலிக்கும் முறையின் விளக்கப்படங்களைக் கொண்டிருக்கவேண்டும்.)

4.4 குறிப்பிடப்பட்டுள்ள வட்டிக் கட்டணத்தைச் செலுத்துவதில் பாரபட்சமின்றி, அட்டைதாரர் செலுத்தவேண்டிய குறைந்தபட்சத் தொகையை செலுத்தவேண்டிய திகதிக்குள் செலுத்தத் தவறினால், அறிக்கைத் திகதியில் உள்ள மொத்த நிலுவைத் தொகையில் தாமதக் கட்டணம் விதிக்கப்படும். வங்கியால் தீர்மானிக்கப்பட்டு, அவ்வப்போது முதன்மை அட்டைதாரருக்கு அறிவிக்கப்பட்டு இணையத்தளத்தில் வெளியிடப்படும்.

4.5 ஏதாவது காசோலை அல்லது பிற கட்டண உத்தரவு வழங்கப்பட்டால் அல்லது சமர்ப்பிக்கப்பட்டால், வங்கியால் தீர்மானிக்கப்படும் மற்றும் முதன்மை அட்டைதாரருக்கு அறிவிக்கப்பட்டு இணையத்தளத்தில் வெளியிடப்படும் விகிதத்தில், அட்டையை வைத்திருப்பவருக்கும் அட்டைக் கணக்கிலிருந்து டெபிட் செய்வதற்கும் வங்கி ஒரு கையாளுதல் கட்டணத்தை வசூலிக்கும். அட்டை வைத்திருப்பவர் அல்லது வேறு எந்த தரப்பினரும் எக்காரணத்தை முன்னிட்டும் வங்கிக்கு பணம் செலுத்தியதாக மதிக்கப்படுவதில்லை. இந்தக் கட்டணம் வங்கியால் விதிக்கப்படும் எந்தத் தபால் கட்டணங்களுக்கும் கூடுதலாக இருக்கும்.

4.6 வங்கியால் தீர்மானிக்கப்பட்டு, முதன்மை அட்டைதாரருக்கு அறிவிக்கப்பட்டு இணையத்தளத்தில் வெளியிடப்படும் விகிதத்தில் அட்டைக் கணக்கிலிருந்து எடுக்கப்படும் அனைத்து ரொக்க முன்பணங்களுக்கும் ரொக்க முன்பணக் கட்டணம் வசூலிக்கப்படும். பயணிகளின் காசோலைகள், வரைவுகள் மற்றும் டெலிகிராபிக் பரிமாற்றங்களுக்காக அட்டை மூலம் செய்யப்படும் அனைத்துக் கட்டணங்களும் ரொக்க முன்பணங்களாகக் கருதப்படும். அத்துடன் மேற்கண்ட கட்டணங்களுக்கு உட்பட்டது.

4.7 பில்லிங் காலத்தில் (பில் பட்டியலிடல் காலத்தில்) எந்த நேரத்திலும் ஒதுக்கப்பட்ட அட்டை வரம்பை மீறினால், வரம்புக்கு மேல் கட்டணம் வசூலிக்கப்படும். அதிகப்படியான வரம்புக்கட்டணம், வங்கியால் அவ்வப்போது அதன் விருப்பப்படி நிர்ணயிக்கப்பட்டு, முதன்மை அட்டைதாரருக்கு அறிவிக்கப்பட்டு இணையத்தளத்தில் வெளியிடப்படும். இந்த நோக்கத்திற்காக, அதிகப்படியான வரம்புக் கட்டணத்தைப் பயன்படுத்தும்போது, எந்த வங்கிக் கட்டணங்களின் அளவும் பரிசீலிக்கப்படும்.

4.8 இலங்கையில் உள்ள நிரப்பு நிலையங்களில் இருந்து கிடைக்கும் அனைத்து பெற்றோல், டீசல், எரிவாயு மற்றும் இதர விநியோகங்களின் அனைத்துக் கொள்வனவுகளும், வங்கியால் தீர்மானிக்கப்படும் விகிதத்தில் கையாளுதல் கட்டணத்திற்கு உட்பட்டது. இது குறித்து முதன்மை அட்டைதாரருக்கு அறிவிக்கப்பட்டு இணையத்தளத்தில் வெளியிடப்படும்.

4.9 பணம் செலுத்துவதற்காக அட்டையை வழங்காமல் செயற்படுத்தப்படும் அனைத்து அட்டைப் பரிவர்த்தனைகளும் வங்கியால் தீர்மானிக்கப்படும் விகிதத்தில் கையாளுதல் கட்டணத்திற்கு உட்பட்டது. இது குறித்து முதன்மை அட்டைதாரருக்கு அறிவிக்கப்பட்டு இணையத்தளத்தில் வெளியிடப்படும்.

4.10 விற்பனை வரைவோலையின் புகைப்பட நகலைப் பெறுவதற்கான கட்டணம் வங்கியால் தீர்மானிக்கப்படும் விகிதத்தில் அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்படும். அத்துடன் முதன்மை அட்டைதாரருக்கு அறிவிக்கப்பட்டு இணையத்தளத்தில் வெளியிடப்படும்.

4.11 காலத்துக்குப் பொருத்தமான முத்திரைத் தீர்வை அல்லது வேறு சட்டரீதியான கட்டணம் அல்லது வரி, அட்டை மூலம் செய்யப்படும் பரிவர்த்தனைக்குரிய கட்டணம் ஆகியவை அட்டைக் கணக்கிலிருந்து வசூலிக்கப்படும். இதில் துணை அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்ட அட்டைகள் அல்லது அத்தகைய சட்டங்கள், ஒழுங்கு முறைகள், பிற முறைகள், விதிகள் ஆகியவையும் அடங்கும்.

4.12 ஏதாவதொரு காரணத்தினால் அட்டையை மாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டால் மாற்று அட்டைக்கான கட்டணம் வங்கியால் தீர்மானிக்கப்பட்டு அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்படுவதுடன் இது குறித்து முதன்மை அட்டைதாரருக்கு அறிவிக்கப்பட்டு இணையத்தளத்தில் வெளியிடப்படும்.

## 5. துணை அட்டை

5.1 முதன்மை அட்டைதாரரின் வேண்டுகோளின் பேரில் முதன்மை அட்டைதாரரின் உடனடி குடும்ப உறுப்பினர்களுக்கு ஒரு துணை அட்டையை வங்கி வழங்கலாம். துணை அட்டைதாரரும் துணை அட்டையின் பயன்பாடும் இந்த ஒப்பந்தத்தில் உள்ள அதே விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு நிர்வகிக்கப்படும். அட்டை பரிவர்த்தனைகள் மற்றும் துணை அட்டைதாரரினால் எடுக்கப்படும் பணம் ஆகியவை அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்படும். அத்துடன் முதன்மை அட்டைதாரருககு அனுப்பப்படும் கணக்குகளின் மாதாந்த அறிக்கையில் இந்த விபரம் காட்டப்படும். துணை அட்டைதாரருக்கு தனியாக கணக்கு அறிக்கை எதுவும் வழங்கப்படமாட்டாது.

5.2 துணை அட்டையைப் பயன்படுத்துவதால் ஏற்படும் எந்தவொரு கட்டணத்துக்கும் முதன்மை அட்டை வைத்திருப்பவர் மற்றும் துணை அட்டை வைத்திருப்பவர் கூட்டாக மற்றும்/ அல்லது தனித்தனியாக வங்கிக்குப் பொறுப்பாவார்கள். முதன்மைக் கடனாளியாக அட்டைக்கணக்கில் காட்டப்பட்டுள்ள முழு நிலுவைத்தொகைக்கும் முதன்மை அட்டைதாரர் பொறுப்பாவார். முழுத்தொகை அல்லது அதன் ஒருபகுதி துணை அட்டைதாரரால் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், முதன்மை அட்டைதாரரின் பொறுப்புகள் இருக்கும் வரை தொடரும். முதன்மை அட்டை வைத்திருப்பவருக்கும் துணை அட்டை வைத்திருப்பவருக்கும் இடையிலான உறவு நிறுத்தப்பட்டிருப்பினும், வங்கிக்குச் செலுத்தவேண்டிய தொகை நிலுவையில் இருக்கும்.

5.3 துணை அட்டை வழங்கப்பட்டவுடன் அது நடைமுறையில் இருக்கும். முதன்மை அட்டைதாரர் அல்லது துணை அட்டைதாரரால் அட்டை நிலையத்திற்கு எழுத்து மூலம் ரத்துச் செய்வதாக அற்விக்கப்படும் வரை அது நடைமுறையில் இருக்கும்.

5.4 இந்த ஒப்பந்தம் முடிவடைந்ததும் அல்லது முதன்மை அட்டையைப் பயன்படுத்துதல் முடிந்ததும் அனைத்து துணை அட்டை/ அட்டைகளின் பயன்பாடும் நிறுத்தப்பட்டுவிடும். துணை அட்டை/ அட்டைகள் வங்கிக்குத் திரும்ப அனுப்பப்படவேண்டும்.

## 6. பில் பட்டியலிடல் மற்றும் பணம் செலுத்துதல்

6.1 வட்டியைக் கணக்கிடுவதற்கும் திகதியை நிர்ணயம் செய்வதற்கும் வங்கியானது, பில் பட்டியலிடும் காலத்தின் முடிவில், முதன்மை அட்டைதாரருக்கு (ஒவ்வொரு மாதமும் வங்கியால் அதன் விருப்பப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட திகதியில்) கணக்கு அறிக்கையை மாதந்தோறும் அனுப்பும். அதில் பணம் செலுத்தவேண்டிய காலம் குறிப்பிடப்பட்டிருக்கும். மாதாந்த கணக்கு அறிக்கையானது, முதன்மை அட்டைதாரர் மற்றும்/ அல்லது துணை அட்டைதாரரால் மேற்கொள்ளப்பட்ட அட்டை பரிவர்த்தனை விபரங்கள், முந்தைய அறிக்கையிலிருந்து நிலுவையில் உள்ள தொகை, பில் பட்டியலிடும் காலத்தில் அட்டை நிலையத்தால் பெறப்பட்ட பணம், மொத்தத் தொகை ஆகியவை குறிப்பிடப்பட்டிருக்கும். பில் பட்டியலிடும் காலத்தின் முடிவில் அட்டைக் கணக்கு (மொத்த நிலுவைத் தொகை), செலுத்தவேண்டிய குறைந்த பட்ச கட்டணம் ஆகியவையும் குறிப்பிடப்பட்டிருக்கும்.

6.2 முதன்மை அட்டைதாரர் மாதாந்த கணக்கு அறிக்கையைப் பெறத் தவறினால், பில் பட்டியலிடும் காலம் முடிவடைந்த 10 நாட்களுக்குள் அவர் மாதாந்த கணக்கு அறிக்கையைத் தாம் பெறவில்லை என்பதை வங்கியின் அட்டை நிலையத்திற்கு தெரிவிக்கவேண்டியது முதன்மை அட்டைதாரரின் கடமையாகும்.

6.3 வங்கியின் வாடிக்கையாளராக இருக்கும் அட்டைதாரர், அட்டைப் பரிவர்த்தனைகள், கணக்கு நிலை, மற்றும் பில் செலுத்துதல் ஆகியவற்றை சரிபார்ப்பதற்கு அவருக்கு இ - வங்கி/வேர்ச்சுவல் பேங்கிங் வசதியை செயற்படுத்தவேண்டும்.

6.4 மாதாந்த கணக்குஅறிக்கையைப் பெற்றுக்கொள்ளாமையானது உரிய திகதியில் வங்கிக்கு பணம் செலுத்தவேண்டிய கடப்பாட்டிலிருந்து அட்டைதாரரை விடுவிக்கமாட்டாது.

6.5 அட்டைக் கணக்குத் தொடர்பாக வங்கிக்கு அட்டைதாரர் செலுத்தும் பணம், அட்டை நிலையத்தால் பெறப்படும்போது, வங்கிக்கு அட்டைதாரரின் பொறுப்புகளைச் செலுத்துவதற்கு அல்லது இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ், அத்தகைய வரிசையில் வங்கியால் செலுத்தப்படுவது பற்றி வங்கி முடிவு செய்யலாம்.

6.6 வங்கியின் ஏதேனும் ஒரு கிளையில் நடப்பு அல்லது சேமிப்புக் கணக்கை வைத்திருக்கும் அட்டைதாரர், அத்தகைய பரிவர்த்தனையின் மூலம் குறிப்பிட்ட தொகையை செலுத்துவதற்கு அல்லது அதற்கு முன் பணம் செலுத்துவதற்கு, அத்தகைய கணக்கில் நேரடி பற்று நிலையியற் கட்டளையை(டெபிற் ஸ்ரான்டிங் ஓடர்) வழங்கலாம். அத்தகைய நிலையான உத்தரவு அறிவுறுத்தலில் ஏதாவது திருத்தங்கள் செய்யப்பட்டாலோ அல்லது ரத்து செய்யப்பட்டாலோ, அடுத்த கட்டணம் செலுத்தவேண்டிய திகதிக்கு குறைந்தது இரண்டு வாரங்கள் முன்னதாக அந்த விபரம் அட்டை நிலையத்தை அடையவேண்டும்.

6.7 அட்டை தொடர்பாக வெளியிடப்பட்ட ஒவ்வொரு கணக்கு அறிக்கையையும் அட்டைதாரர் ஆய்வு செய்து, அதில் ஏதேனும் தவறுகள் இருப்பதாகக் கருதினால் அறிக்கைத் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் வங்கியின் அட்டை நிலையத்திற்கு தெரிவிக்கவேண்டும். 14 நாட்களுக்குள் அத்தகைய தவறை வங்கிக்குத் தெரிவிக்க அட்டைதாரர் தவறினால் அல்லது புறக்கணித்தால், கணக்கு அறிக்கை மற்றும் அதிலுள்ள அனைத்து உள்ளீடுகளும் அட்டைதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும் அதன் உள்ளடக்கங்களுக்கான உறுதியான சான்றாகவும் கருதப்படும். அதன்பின் அந்தக் கணக்கு அறிக்கையின் உள்ளடக்கங்களை அட்டைதாரர் மறுக்கக்கூடாது. கணக்குகளின் அனைத்து அறிக்கைகளும் முதன்மை அட்டைதாரரினால் எழுத்து மூலமாக வங்கிக்கு வழங்கப்பட்ட சமீபத்திய முகவரிக்கு சாதாரண தபால் மூலம் அனுப்பப்படவேண்டியதுடன் இடுகையிடப்பட்ட 48 மணித்தியாலங்களுக்குள் பெறப்பட்டதாகக் கருதப்படும். அட்டை தொடர்பான எந்தவொரு முறைப்பாடும் அட்டை நிலையத்திற்கு 011 2 462 462, தொலைநகல் 011 2 686 713, hnbcare@hnb.lk என்ற மின்னஞ்சல் அல்லது அவ்வப்போது வங்கியால் இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட வேறு எந்த எண்/ தொடர்பு முறையிலும் தெரிவிக்கலாம்.

6.8 வெளிநாட்டு நாணயங்களை இலங்கை ரூபாவாக மாற்றும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும், தமக்கும் வங்கிக்கும் இடையில் தீர்மானிக்கப்பட்ட அல்லது பயன்பாட்டிலுள்ள அந்தந்த மாற்று விகிதங்கள் அல்லது மறுபரிமாற்ற விகிதங்களை அட்டைதாரர் இறுதி மற்றும் உறுதியாக ஏற்றுக்கொள்ளவேண்டும். இலங்கை ரூபாவை வெளிநாட்டு நாணயமாக மாற்றும்போது பணம் செலுத்தும் நாணயம் மற்றும் கணக்கிலுள்ள நாணயம் எதுவாக இருந்தாலும் வங்கிக்கான அட்டைதாரரின் இறுதிப் பொறுப்பு இலங்கை ரூபாவில் இருக்கும்.

6.9 அனைத்து மாற்றங்களும் மறுமாற்றங்களும் வங்கிக்கு எந்த இழப்பும் இல்லாமல் இருக்கவேண்டும். அத்துடன் அட்டைதாரர் இதன் மூலம் வங்கிக்கு ஏற்படக்கூடிய அனைத்து இழப்புகளுக்கும் இழப்பீடு வழங்க உறுதியளிக்கிறார். பரிமாற்றத்தில் ஏற்படும் இழப்பு என்பது, வங்கி, அல்லது அதன் முகவர் அல்லது நிருபர்கள் ஆகிய சாராருக்கு நாணயங்களின் சமநிலைகளில் ஏற்ற இறக்கங்கள் அல்லது சம்பந்தப்பட்ட எந்த நாணயம்/ பணமதிப்பு இழப்பு காரணமாகவும் ஏற்படும் இழப்பைக் குறிக்கும்.

6.10 அட்டைதாரரின் இறப்பிற்குப் பிறகு, நிறைவேற்றுநர்கள், நிர்வாகிகள், சட்டப் பிரதிநிதிகள் அலலது அட்டைதாரரின் வாரிசுரிமையைப் பெற்ற அடுத்த உறவினர்கள் அட்டைக் கணக்கில் செலுத்தவேண்டிய அல்லது நிலுவையில் உள்ள அனைத்துப் பணத்தையும் திரும்பச்செலுத்தி முடிப்பதற்கு பொறுப்பாவார்கள் என்பதை அட்டைதாரர் இதன் மூலம் ஒப்புக்கொள்கிறார்.

## 7. கணக்குகளின் அறிக்கை

7.1 அட்டையில் உள்ள பொறிக்கப்பட்ட தகவலின் முத்திரை அல்லது மறு உருவாக்கம், மற்றும் மின்னணு புள்ளியில் இருந்து தயாரிக்கப்பட்ட எந்தவொரு விலைப்பட்டியல்/ அச்சுப்பொறியையும் கொண்டு, ஏதேனும் விற்பனை வரைவு மற்றும்/ அல்லது பிற கட்டணங்களை நிர்ணயிக்க வங்கிக்கு உரிமை உண்டு என்பதை அட்டைதாரர் இதன் மூலம் ஒப்புக்கொள்கிறார். விற்பனை இயந்திரங்கள், அதில் குறிக்கப்பட்டுள்ள தொகைகள் அட்டைதாரரிடமிருந்து வங்கிக்கு செலுத்தவேண்டியவை என்பதற்கு அட்டைதாரருக்கு எதிரான உறுதியான ஆதாரமாகும்.

7.2 வங்கியின் அட்டை நிலையத்தின் மேலாளரால் கையொப்பமிடப்பட்டு, சான்றளிக்கப்பட்டு, வங்கியால் எழுத்துமூலமாகவோ அல்லது ஆவணவடிவிலோ சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் எந்தவொரு அறிக்கையையும் அத்துடன் வங்கியின் அட்டை நிலையத்தின் மேலாளரால் அல்லது அந்த நோக்கத்திற்காகக் பிரத்தியேகமாக நியமிக்கப்பட்ட பிறரால் சான்றளிக்கப்பட்டது என்பதையும் அட்டைதாரர் இதன் மூலம் ஒப்புக்கொள்கிறார். வங்கி, வேறு எந்த ஆவணங்களும் அல்லது வவுச்சரும் இல்லாமல் அதன் உள்ளடக்கங்கள் அட்டைதாரருக்கு எதிரான உறுதியான ஆதாரமாக சட்டத்தில் போதுமானதாகக் கருதப்படும். இந்தக் கணக்கு அறிக்கைகள், அட்டை பரிவர்த்தனைகள், கட்டணங்கள், சட்டபூர்வ கொடுப்பனவுகள், அல்லது டெல்லர் மெஷின் மூலம் பணம் மீளப்பெறுதல், ஆகியவற்றைக் காட்டும் ஆவணங்களின் வடிவத்தில் இருக்கலாம் என்பதை அட்டைதாரர் ஒப்புக்கொள்கிறார். அல்லது வங்கியின் புத்தகங்கள், கணிணிப் பதிவுகள், ஆவணங்கள் மற்றும் நினைவகச் சேமிப்பகச் சாதனங்களிலிருந்து வெளியிடப்பட்ட அறிக்கைகளும், வங்கியால் வழங்கப்பட்ட அத்தகைய ஆவணங்கள், அதில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அட்டை வைத்திருப்பவரிடமிருந்து வங்கிக்குச் செலுத்தப்படவேண்டியவை என்பதற்கான உறுதியான சான்றாகக் கருதப்படும் என்றும், அவை நீதிமன்றத்தில் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் அட்டைதாரர் ஒப்புக்கொள்கிறார்.

7.3 பொயின்ட் ஒ.ஃப் சேல் மெஷின்கள் மற்றும் ஒன்லைன் பரிவர்த்தனைகள் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் அட்டைப் பரிவர்த்தனைகளைக் காட்டும் மேலேயுள்ள உப பத்தி (2) இல் குறிப்பிடப்பட்டுள்ள கணக்குகள், நேரடிப்பிரதிகள், எழுத்தில் அல்லது வேறு ஆவணங்களில் உள்ள எந்தவொரு தகவலையும் அட்டைதாராகள் ஏற்றுக்கொள்வார்கள் என்பதை அட்டைதாரர் இதன் மூலம் ஒப்புக்கொள்கிறார். 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலத்திரனியல் பரிவர்த்தனைகள் சட்டத்தின் விதிகளின்படி வரையறுக்கப்பட்ட டெல்லர் இயந்திரம் மூலமாகவோ அல்லது வேறு ஏதேனும் மின்னணு ஊடகத்தின் மூலமாகவோ மேற்கொள்ளப்படும் எந்தவொரு பணத்தையும் திரும்பப் பெறுதல் செல்லுபடியாகும்.

## 8. ஏ.ரி.எம் (ATM) இயந்திரங்கள் மற்றும் பின் (PIN) பயன்படுத்துதல்

8.1 அட்டையில் தானியங்கி டெல்லர் மெஷின் வசதி இணைக்கப்பட்டிருந்தால், அது மின்னணு முறையில் பணத்தை எடுக்கப் பயன்படும் வகையில், அத்தகைய வசதியைப் பயன்படுத்துவது வங்கிக்கும் விசா/ மாஸ்டர் கார்ட்டுக்கும் இடையேயான பரிவர்த்தனைக் கட்டுப்பாட்டுச் சட்டத்திற்கு அமைவான சர்வதேச ஒப்பந்தத்திற்கு உட்பட்டது.

## 9. அட்டை மற்றும் பின் (PIN) ஐப் பாதுகாத்தல்

9.1 அட்டை வைத்திருப்பவர் அதன் பாதுகாப்பை உறுதிசெய்ய அனைத்து விதமான கவனத்தையும் செலுத்தவேண்டும். மேலும் PIN வேறு யாருக்கும் தெரிந்துவிடாமல் தடுக்கவேண்டும். மேலும் PIN எந்தவிதத்திலும் எழுதப்படவில்லை என்பதையும் உறுதிசெய்ய வேண்டும்.

## 10. பொறுப்பு/ அட்டை இழப்பு

10.1 அட்டை தொலைந்துவிட்டாலோ/ திருடப்பட்டாலோ/ அழிக்கப்பட்டாலோ/ தவறாகப் பயன்படுத்தப்பட்டாலோ அல்லது PIN மற்றொரு நபருக்கு தெரியப்படுத்தப்பட்டாலோ, அட்டைதாரர் அந்த இழப்பு, திருட்டு அல்லது வெளிப்படுத்தல் குறித்து காவல்துறை மற்றும் அட்டை நிலையத்திற்கு உடனடியாகத் தெரிவிக்கவேண்டும். அத்தகைய அறிவிப்பு, அட்டை நிலையத்திற்கு வாய்மொழியாக வழங்கப்பட்டால், எழுத்து மூலமாக உறுதிப்படுத்தப்பட்டாலன்றி நடைமுறைக்கு வராது.

10.2 எழுத்து மூல அறிவிப்பு அட்டை நிலையத்துக்குக் கிடைக்கப்பெறும் வரையில், அட்டையின் எந்தப் பயன்பாட்டிற்கும், அனைத்து அட்டைப் பரிவர்த்தனைகள் மற்றும் பணம் திரும்பப்பெறுதல் ஆகியவற்றிற்கு அட்டைதாரர் பொறுப்பாவார்.

10.3 அட்டையின் இழப்பு அல்லது தவறாகப் பயன்படுத்துதல் அல்லது PIN ஐ வெளிப்படுத்தல் போன்ற சூழ்நிலைகள் குறித்து அட்டைதாரரின் வசம் உள்ள அனைத்து தகவல்களையும் அட்டைதாரர் வங்கிக்கு வழங்குவார். மேலும் காணாமல் போனதை மீட்டெடுப்பதில் உதவுவதற்கு வங்கிக்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும். அத்துடன் காவல்துறையில் செய்த முறைப்பாட்டின் பிரதி ஒன்றையும் அவர் வழங்கவேண்டும்.

10.4 வங்கியானது அதன் முழுமையான விருப்பத்தின் பேரில், அசல் அட்டையின் அதே விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில், தொலைந்த அல்லது திருடப்பட்ட எந்தவொரு அட்டைக்கும் மாற்றீட்டு அட்டையை வழங்கலாம்.

10.5 அட்டைதாரர் தொலைந்து போன அல்லது திருடப்பட்ட அட்டையை மீட்டெடுத்தால், மீட்கப்பட்ட அட்டையை உடனடியாக அட்டை நிலையத்திற்கு அனுப்பவேண்டும்.

## 11. விலக்குதல் மற்றும் தவிர்த்தல்

11.1 ஒரு வர்த்தகரோ அல்லது வேறொரு வங்கியோ அல்லது வேறொரு தரப்பினரோ இந்த அட்டையை மதிக்கவோ ஏற்கவோ மறுத்தால் அல்லது ரொக்க முன்பணங்கள் உட்பட முழு மற்றும் அட்டை வரம்பிற்குட்பட்ட கடன் வசதிகளை நீடிக்க மறுத்தால் ஏற்படும் அல்லது ஏற்படக்கூடிய இழப்புகளுக்கோ சேதத்திற்கோ வங்கி பொறுப்பேற்காது என்பதை அட்டைதாரர் ஒப்புக்கொள்கிறார்.

11.2 அட்டை மூலம் வாங்கிய மற்றும் செலுத்தப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளில் ஏதாவது குறைபாடுகளிருப்பின் அதற்கு வங்கி பொறுப்பேற்காது. நிறுவனம், வர்த்தகர், அல்லது வேறொரு வங்கிக்கும் அட்டைதாரருக்கும் இடையே ஏற்படக்கூடிய கோரிக்கை அல்லது தகராறு, வங்கியினால் பணமெதுவும் செலுத்தப்படாமல் தீர்த்துவைக்கப்படும்.

11.3 எந்தவொரு இயந்திரம், தரவு செயலாக்க அமைப்பு, மின்னணு பரிமாற்ற அமைப்பு அல்லது பரிமாற்ற இணைப்பு ஆகியவற்றின் தோல்வியின் காரணமாக, அல்லது வங்கி மற்றும் அதன் ஊழியர்களின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட ஏதாவது காரணமாக இந்த ஒப்பந்தத்தின் கீழ் வங்கி தனது கடமையைச் செய்யத் தவறினால், அட்டைதாரர் வங்கியைப் பொறுப்பாக்கமாட்டார்.

## 12. மீட்சி செயற்பாடுகள்

12.1 இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் செலுத்தவேண்டிய திகதியில், அட்டைதாரர் தனது கடன்களை வங்கிக்கு செலுத்தத் தவறினால், எந்த நேரத்திலும் அட்டைதாரருக்கு முன்னறிவிப்பின்றி, அட்டைதாரரின் எந்தவொரு நடைமுறை மற்றும் சேமிப்புக் கணக்கிலும் அவரது நிலுவையிலுள்ள மொத்தத் தொகையையும் பற்று வைக்க அட்டைதாரர் ஒப்புக்கொள்கிறார். அது அவரது தனியான கணக்காகவோ அல்லது இணைந்த கணக்காகவோ வங்கியின் எந்தவொரு கிளையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள கணக்காவோ இருக்கலாம்.

12.2 அட்டைதாரர் தமக்கு எவ்வித முன்னறிவிப்புமின்றி வங்கி பின்வரும் காரியங்களை செய்ய ஒப்புக்கொள்கிறார். (i) அட்டைதாரர் தமது பெயரில் வங்கியின் எந்தக் கிளையிலும் இருக்கும் பணத்தை இந்நிலுவைக்கென எடுக்க. (ii) வங்கியின் எந்தவொரு கிளையிலும் அட்டைதாரருக்குரிய எந்தவொரு கணக்கிலும் வரவு வைக்கப்பட்டிருக்கும் தொகையிலிருந்தும் அட்டைதாரர் செலுத்தவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய முழுத்தொகை வரையிலான தொகையை வசூலிக்க. (iii) வங்கியின் எந்தவொரு கிளையிலும் அட்டைதாரரால் தனியாகவோ அல்லது இணைந்தோ வைத்திருக்கும் எந்தவொரு வைப்புத்தொகையிலிருந்தும் அட்டைக் கணக்கின் மூலம் செலுத்தவேண்டிய தொகையைச் செலுத்துவதற்கும் அத்துடன் அட்டைக் கணக்கில் நிலுவையாக உள்ள தொகை முழுமையாகச் செலுத்தப்படும் வரை அத்தகைய வைப்புத்தொகைக்கு உரிமை கொள்ளவும்.

12.3 அட்டைதாரரின் சொத்துகளை மீட்டெடுக்க வங்கிக்கு உரிமை உண்டு என்பதை அட்டைதாரர் ஏற்றுக்கொண்டு வங்கியால் எடுக்கப்பட்ட அத்தகைய நடவடிக்கைகளை அட்டைதாரர் ஒப்புக்கொள்கிறார்.

12.4 இந்த விதிமுறைகள் மற்றும் நடவடிக்கைகளின் கீழ் வங்கிக்கு தனது பொறுப்புகளைத் தீர்ப்பதற்கு அட்டைதாரர் தாக்கல் செய்தால், வங்கி தனது முழு விருப்பத்தின் பேரில் இந்த ஒப்பந்தத்தை ஒரு தலைப்பட்சமாக முடித்துக்கொள்ளலாம். அத்துடன் இந்த ஒப்பந்தத்தின் கீழ் அட்டைதாரருக்கு வழங்கப்பட்ட அனைத்து அட்டைகளையும் (துணை அட்டைகள் உட்பட) ரத்துச் செய்யலாம். அட்டை வைத்திருப்பவரின் தவறின் காரணமாக வங்கி இந்த ஒப்பந்தத்தை நிறுத்தினால், அத்தகைய அட்டை வைத்திருப்பவர் வங்கியுடன் எந்தவொரு புதிய அட்டை ஒப்பந்தத்திலும் ஈடுபடத் தகுதியற்றவராவார். அத்துடன் அட்டை வைத்திருப்பவர் (முதன்மை மற்றும் துணை) பற்றிய விபரங்கள் இலங்கை கடன் தகவல்கள் பணியகத்திற்கு வங்கியால் தெரிவிக்கப்படும்.

12.5 இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் அட்டைதாரர் தமது கடன்களை வங்கிக்கு செலுத்தத் தவறினால், அட்டைதாரரைச் சந்தித்து, அவரைச் சம்மதிக்க வைப்பதற்காக, மூன்றாம் தரப்பின் சேவைகளைப் பெறுவதற்கு, சேகரிப்பு முகவர்களாக சுயாதீன ஒப்பந்ததாரர்களின் சேவையைப் பெற அட்டைதாரர் வங்கிக்கு அதிகாரமளிக்கிறார். அட்டைக் கணக்கில் அட்டை வைத்திருப்பவர்/ கள் வங்கிக்குச் செலுத்தவேண்டிய தொகைகளை மற்றும் நிலுவைத்தொகைகளை செலுத்துதல்; மற்றும் அத்தகைய நோக்கத்திற்காக, மூன்றாம் தரப்பினருக்கு, சுயாதீன ஒப்பந்ததாரருக்கு, பரிவர்த்தனைகள் மற்றும் நிலுவைத் தொகைகள் போன்ற தேவையான கடன் தகவல்களை வெளிப்படுத்துதல் ஆகியவற்றை ஏற்றுக்கொள்கிறார்.

12.6 அட்டைக் கணக்கில் நிலுவையில் உள்ள பணத்தை அட்டைதாரர் தொடர்ந்து செலுத்தத்தவறினால், அட்டைக் கணக்கில் நிலுவையிலுள்ள மொத்தப்பணத்தை மீட்டெடுப்பதற்காக முதன்மை அட்டைதாரருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வங்கிக்கு உரிமை உண்டு என்பதை அட்டைதாரர் ஒப்புக்கொள்கிறார். (கூட்டாகவோ அல்லது கூடுதலாகவோ துணை அட்டைதாரர் இருக்கும் சந்தர்ப்பங்களில், துணை அட்டைதாரருடன்)

12.7 இந்த விடயத்தை பணத்தை வசூலிக்கும் முகவர் நிறுவனத்துக்கு அனுப்புவது அல்லது சட்பூர்வ ஆதரவைப் பெறுவது அவசியமானால், நிலுவைத்தொகைகள், சட்டச் செலவுகள் மற்றும் நிலுவைத்தொகைகளை வசூலிப்பதற்கான அனைத்துச் செலவு களையும் கட்டணங்களையும் அட்டைதாரர் செலுத்தவேண்டியிருக்கும் என்பதை அட்டைதாரர் ஒப்புக்கொள்கிறார்.

## 13. வெளிப்படுத்துதல்

13.1 அட்டைக் கணக்கில் செலுத்தவேண்டிய பணத்தை திருப்பிச் செலுத்துவதில் அட்டைதாரர் தவறிய சந்தர்ப்பத்தில் வங்கியால் ஈடுபடுத்தப்பட்டுள்ள மூன்றாம் தரப்புச் சேவை வழங்குநருக்கும், அத்தகைய சேவைகளை வழங்குவதற்கான வரையறுக்கப்பட்ட நோக்கத்திற்காக இலங்கை கடன் தகவல் பணியகத்திற்கும், அட்டைதாரரின் அட்டைக் கணக்கு தொடர்பான தகவலை, அட்டைதாரருக்கு அறிவித்து அல்லது அறிவிக்காது வங்கி வெளியிடலாம்.

## 14. பொது

14.1 முதன்மை அட்டைதாரர் தனது பெயர், முகவரி, வேலைவாய்ப்பு, மற்றும் கைத்தொலைபேசி இலக்கம் போன்றவற்றில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டால் உடனடியாக வங்கியின் அட்டை நிலையத்திற்கு எழுத்து மூலம் அறிவிக்கவேண்டும்.

14.2 எந்தவொரு அட்டைதாரரின் நிலுவையில் உள்ள தொகையையும் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ மாற்றுவதற்கும், ஒதுக்குவதற்கும் மற்றும் விற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதன் முழுமையான விருப்பத்தின் பேரில் உரிமை உண்டு.

14.3 முதன்மை அட்டைதாரரின் எழுத்து மூலக் கோரிக்கையின் பேரில், வங்கி தனது விருப்பத்திற்கமைய அவரது கடன் அட்டையை மேம்படுத்தலாம். அத்துடன்/ அல்லது அவரது கடன் வரம்பை அதிகரிககலாம்.

14.4 வங்கிக்குத் தேவைப்படும் போதெல்லாம் அட்டை வைத்திருப்பவர் தனது நிதி நிலை குறித்த தரவுகளை வங்கிக்கு அளிக்கவேண்டும். வழங்கப்பட்ட தகவலைச் சரிபார்க்க அட்டைதாரர் வங்கிக்கு மேலும் அதிகாரம் அளிக்கிறார். அழைக்கப்படும் போது தரவு வழங்கப்படாவிட்டால், வங்கி அதன் விருப்பத்தின பேரில் அட்டை புதுப்பிப்பதை மறுக்கலாம். அல்லது அட்டையை உடனடியாக ரத்துச் செய்யலாம்.

## 15. அட்டையை ரத்துச் செய்தல்

15.1 அட்டையானது எல்லா நேரங்களிலும் வங்கிக்குச் சொந்தமானதாகவே இருப்பதுடன் வங்கியின் கோரிக்கையின் பேரில் அட்டைதாரரால் திரும்பக் கொடுக்கப்படவேண்டும். வங்கி எந்த நேரத்திலும் அறிவிப்பு இல்லாமல், அட்டையை முழுவதுமாக அல்லது குறிப்பிட்ட வசதிகள் சம்பந்தமாகப் பயன்படுத்துவதற்கான உரிமையை ரத்துச் செய்யவோ அல்லது இடைநிறுத்தவோ முடியும். மேலும் இந்த ஒப்பந்தத்தின் கீழுள்ள அட்டைதாரரின் கடமைகளைப் பாதிக்காத வகையில், எந்தவொரு அட்டையையும் மீண்டும் வெளியிடவோ, புதுப்பிக்கவோ அல்லது மாற்றவோ மறுக்கலாம். இந்த விதிமுறை தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும்.

## 16. நிறுத்துதல்

16.1 முதன்மை அட்டைதாரர் இந்த ஒப்பந்தத்தை அட்டை நிலையத்திற்கு எழுத்துமூலமாக அறிவிப்பதன் மூலம் நிறுத்தலாம். ஆனால் அட்டைக் கணக்கில் பயன்படுத்துவதற்காக வழங்கப்பட்ட அனைத்து அட்டைகளையும் வங்கிக்குத் திருப்பி அனுப்பும் போதும், ஒப்பந்தத்தின் கீழ் அட்டைதாரரின் அனைத்து பொறுப்புகளையும் நிறைவேற்றும்போது மட்டுமே அத்தகைய முடிவு நடைமுறைக்கு வரும்.

16.2 அட்டைதாரர் குடியகல்வதற்காக நாட்டை விட்டு வெளியேறும் பட்சத்தில், அட்டை (துணை அட்டை/ கள் உட்பட) வங்கியிடம் ஒப்படைக்கப்படவேண்டும்.

16.3 அட்டைதாரர் வெளிநாட்டு வேலைக்காக நாட்டை விட்டு வெளியேறினால், அட்டை வைத்திருப்பவா இலங்கையின் பரிமாற்றக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு அட்டையைப் பயன்படுத்தலாம்.

16.4 அட்டைதாரர் இலங்கையில் வதியாதவராக மாறும்போது இலங்கையின் பரிமாற்றக் கட்டுப்பாட்டு விதிமுறைகளுக்கமைய அட்டையை ரத்துச் செய்வதற்கு வங்கிக்கு உரிமை உண்டு (துணை அட்டை/ கள் உட்பட).

16.5 இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு காரணத்திற்காக வங்கி இந்த ஒப்பந்தத்தை நிறுத்தமுடியும். அத்தடன் அட்டை வசதிகளை ரத்துச் செய்யலாம்.

## 17. இந்த ஒப்பந்தத்தில் ஏற்படக்கூடிய மாறுபாடு

17.1 வங்கி இந்த ஒப்பந்தத்தை எந்த நேரத்திலும் அல்லது நேரங்களிலும் மேலே குறிப்பிட்டுள்ள மாற்றங்கள்/ திருத்தங்கள் இல்லாதவிடத்தும் மாற்றலாம்/ திருத்தலாம். அவ்வாறு செய்யப்படும் மாற்றங்கள்/ திருத்தங்கள் அட்டைதாரருக்கு அறிவிக்கப்படுவதுடன் இணையத்தளத்திலும் வெளியிடப்படும். இந்த மாற்றங்கள்/ திருத்தங்களுடன் அட்டைதாரர் உடன்படவில்லை என்றால் ஒப்பந்தத்தை முறித்தக்கொள்ள அவருக்கு சுதந்திரம் உள்ளது. இது குறித்து அவர் 10 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறிவித்தல் கொடுக்கவேண்டும்.

## 18. இழப்பெதிர்காப்பு (முன் காப்பீடு)

18.1 அட்டைதாரரால் அல்லது அவர் சார்பாக தொலைபே, டெலக்ஸ் அல்லது தொலைநகல் மூலமாக வழங்பக்கடும் எனத் தெரிவிக்கப்படும் எந்தவொரு அறிவிப்பு, கோரிக்கை அல்லது பிற தகவல் தொடர்புகளுக்கு ஏற்ப நல்ல நம்பிக்கையுடன் செயற்படும் அறிவுறுத்தல்களுக்காக வங்கிக்கு இழப்பீடு வழங்க அட்டைதாரர் ஒப்புக்கொள்கிறார். அறிவுறுத்தல் பெறப்பட்ட நேரம்.

18.2 வங்கியின் விதிகள் அல்லது அவற்றின் அமலாக்கம் காரணமாக வங்கி ஏற்படுத்தக்கூடிய ஏதேனும் பொறுப்புகள், இழப்புகள், சேதங்கள் மற்றும் செலவுகள் (சட்ட அல்லது வேறு) ஆகியவற்றிறகாக வங்கிக்கு பாதிப்பேற்படாதவாறு இருப்பதற்கும் இழப்பீடு வழங்குவதற்கும் அட்டைதாரர் உறுதியளிக்கிறார்.

## 19. பத்திரங்களை வைத்திருத்தல்

அட்டைதாரரின் தவறு ஏற்படுமிடத்து கடன் அட்டை மூலம் வங்கிக்குச் செலுத்தவேண்டிய தொகைகள், அடமானம் உட்பட வங்கியால் வழங்கப்பட்ட பிற நிதி மற்றும்/ அல்லது அடகு/ வசதிகள் ஆகியவை முழுமையாகத் தீர்க்கப்படும் வரை அட்டைதாரரால் செயற்படுத்தப்பட்ட பத்திரங்களைத் தக்கவைத்துக் கொள்வதற்கு வங்கிக்கு உரிமை உண்டு.

## 20. அறிவிப்புகள்

20.1 அட்டைதாரருக்கான அனைத்து அறிவிப்புகளும், வங்கிக்கு வழங்கப்பட்ட முதன்மை அட்டைதாரரின் சமீபத்திய முகவரிக்கு, எழுத்து மூலமாக தபாலில் அனுப்பப்படும். மேலும் அனைத்துப் பொது அறிவிப்புகளும் இணையத்தளத்தில் வெளியிடப்படும்.

## 21. ஆளும் சட்டம்

21.1 இந்த ஒப்பந்தம் இலங்கை சோசலிசக் குடியரசின் சட்டங்களுக்கு இணங்கவும் கட்டமைக்கப்பட்டும் நிர்வகிக்கப்படுகிறது.

## 22. குற்றங்கள்

22.1 இலங்கையின் சட்டங்களுக்கு முரணான அல்லது இலங்கையின் சட்டங்களின் கீழ் குற்றமாகக் கருதப்படும் எந்தவொரு வகையிலும் அல்லது எந்தவொரு நோக்கத்திற்காகவும் அட்டையை எந்தவொரு அட்டைதாரரும் பயன்படுத்தினால், வங்கி தனது முழுமையான விருப்பத்தின் பேரில் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் ஒருதலைப் பட்சமாக இந்த ஒப்பந்தத்தை ரத்துச் செய்யலாம். மேலும் வழங்கப்பட்ட அனைத்து அட்டைகளும் ரத்துச் செய்யப்படும். அத்துடன் இச்சட்டவிரோத செயற்பாடுகள் மற்றும் பரிவர்த்தனைகள் பற்றிய விபரங்கள் அனைத்தும் இலங்கை மத்திய வங்கிக்கு அறிவிக்கப்படும்